★ சுமரச சன்மார்க்க சங்கம், ★ ... நூல் நிலையம் ... ளையம், ...

4

1263

8

24

175

# சொரூபாநுபூதிக்

ஸ்ரீமத்

கா. நிச்சல

இராமாநந்தசுவாமிகள்

இயற்றியது.

சென்னை,

கோமளேசுவரன்பேட்டை,

சச்சிதாநந்தம் பிரஸ்ஸில்,

பதிப்பிக்கப்பட்டது.

ஓம்

தத்ஸத்

பரப் பிரஹ்மணே நம:.

திருவருட்பிரகாச வள்ளலார் மரபு

காஞ்சிபுரம்

நிச்சல. இராமாநந்த சுவாமிகள்

இயற்றியருளிய

# சொரூபாநுபூதிக் கொம்மி.

இது

சென்னை, ஹிந்துதியலாஜிகல் ஹைஸ்கூல்

தமிழ்ப்பண்டிதர்

ஸ்ரீமத், கோ. வடிவேலுசெட்டியார் அவர்களால்

பார்வையிடப்பட்டு,

பொறையாறு ஸ்ரீமான், பா. சி. தவசுமுத்துநாடார்

மனைவியாகிய

அலர்மேலம்மாளவர்களால்

சென்னை

கோமளேசுவரன்பேட்டை,

சச்சிதாநந்தம் பிரஸ்ஸில் பதிப்பிக்கப் பட்டது.

1912.

விலை அணா 4

௳

# சிறப்புப்பாயிரம்.

வித்துவான்

## ஸ்ரீமத், ஆ. மே. சென்னகேசவலு நாயுடு

அவர்களியற்றிய

### கோச்சகக் கலிப்பா.

மன்னுபுகழ்க் கச்சிநகர் மருவியகௌ ரவகுலத்தில்
துன்னியநற் றவந்திரண்டு தூய்மையுடன் வந்துதித்தோன்
என்னிருகண் மணியனையா னிலங்கியசீர் குணதிலகன்
பன்னியசீர் கலைகளெலாம் படியாமற் பகர்மேலோன்.
விண்ணாட்டின் விபுதர்களு விரிதிரையொண்கடல்கலைகொண்
மண்ணாட்டின் மன்புலவர் மதிமயக்க மிரிந்தோடக்
கண்ணாட்டிக் கதியடைய கருணையருள் புரிபுனிதன்
பெண்ணாட்டிச் செயுமயலை பெரிதகற்றும் பெருவள்ளல்.
இத்தகைய பெருங்கீர்த்தி யிலங்குசொரூ பாநுபூதி
மெய்த்தகைய கொம்மிதனை மேன்மைதருந் தமிழ்ச்செய்தான்
பொய்த்தருவெவ் வினையகலும் போற்றிநிதம் படித்தோர்க்குச்
சத்தியரா மாநந்த சுவாமியெனுஞ் சாந்தனரோ.

இந்நூலாசிரியரின் பாதசேகரராகிய

## ஸ்ரீமத். கா. சொரூபாநந்தமணி சுவாமிகள்

இயற்றிய

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

*சீரிலகு நான்மறையுந் தேடரிய தெள்ளமுதைத்*
*திரட்டி யுண்டு*
*பேரிலகு மாவடலூர் ஞானசித்தி புரத்தோங்கும்*
*பெம்மான் ருளை*
*நேரிலக வுள்ளுணரு நிச்சலரா மாநந்த*
*நிமலன் செய்த*
*பாரிலகுஞ் சொரூபாநு பூதியெனுங் கொம்மிதனைப்*
*பகரற் பாற்றோ.*

சென்னை, பச்சையப்பன்காலேஜ் தமிழ்ப்பண்டிதர்

## ஸ்ரீமான் கா. ர. கோவிந்தராஜ முதலியார்

அவர்களியற்றிய

### எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

*திருவருட் ப்ரகாச வள்ளலார் மரபிற் றிகழரு ளசலக் குரவன, மருமல ரடியை மறந்திடா துளத்தின் மகிழ்வினோ டமைத்தியேத் திடுவோன், கருவழிவாரா வகையருள் புரிவோன கசிவா ழுத்தம சீலன், பெருவரு ளகலா நிச்சல ராமா நந்தனென் பெயர்கொளும் புனிதன்.*

### அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

*துன்னவனுற் சொற்றிடுநற் சொரூபாநு பூதிகொம்மி யலணி கொள்ளு, முன்னவனு மவ்வாதி சேடன்ற னுபிரவாய் மொழியொ னுதேல், என்றொருவா யதன்பெருமை தனையிசைப்ப தினியின்றிங் கெங்ஙனேகொல், சொன்னவித ரணிகளலா லதனசீர்மை யெவர்தடக்குஞ் சொல்லற் பாற்றோ.*

சென்னை, எலிமெண்டரி பாடசாலை இனிஸ்ட்ரக்டரும்.

காஞ்சீபுரம் ஸ்ரீமத், நிச்சல. இராமாநந்தசுவாமிகள்

மாணவருளொருவருமான ஸ்ரீமான்,

நிரதிசயாநந்த சுவாமிகளென்னும்

## பு. சாரங்கபாணி நாயுடவர்களியற்றிய

### அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

உலகமெலாம் வணங்கவரும் வள்ளலிரா மலிங்ககுரு
வுரைத்த ஞான
மிலகவைத்த வருணைச லேசனருட் டிருவடிக
ளிணையைப் போற்றுங்
கலகமிலாக் கச்சிநகர் நிச்சலரா மாநந்தச்
சருணை நாதன்
பலகலைக்கு மினிதாகுஞ் சொரூபாநு பூதிகொம்மி
பகன்றான் மாதோ.

ஸ்ரீமத், வித்வான் ஆ. மே. சென்னகேசவலு நாயுடு

மாணவரிலொருவரும் தமிழுபாத்தியாயர்

ஸ்ரீமான் கோ. பாரூர்பிள்ளையவர்கள் குமாரராகிய

## கோ-பா-தங்கவேலுப்பிள்ளையவர்களியற்றிய

### அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

செச்சலரா சிகணிறைந்த சிந்தூரஞ்சூழ் பாரிலுறும் சீவர் யாரும், முச்சலரா காதபடிக் கருட்டருமி ராமலிங்க முனிவன் றாளை, மெச்சலரா லனவரத மருச்சிக்கத் திருக்கச்சி மேவி வந்த, நிச்சலரா மாநந்தன் சொரூபானு பூதிகொம்மி நிகழ்த்தி னானே.

# சொரூபாநுபூதிக் கொம்மி,

## பிழைதிருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம், |
|---|---|---|---|
| 1 | 8 | கருப்பாயா | கருபாயா |
| 2 | 13 | ருற்றபிழை | னுற்றபிழை |
| 6 | 11 | னிராதார | னிகாற்ற |
| 14 | 11 | மென்றாள் | மென்றான் |
| 17 | 5 | கொண்டிங்கையன் | பொருந்தலையன் |
| 18 | 8 | னுற்றாள் | னுற்றான் |
| 23 | 13 | றான்வலியால் | றாள்வலியால் |
| 27 | 3 | பொன்றுல | போன்றுல |
| 30 | 21 | யிப்யுவி | யிப்புவி |
| 34 | 20 | யப்யி | யப்பி |
| | 21 | விதியிலுண | வதியிலுண |
| 37 | 8 | மசஞ் | மலஞ் |
| 38 | 16 | சன்மதங் | சண்மதங் |
| | 17 | லுன்மதங் | லுண்மதங் |
| 42 | 23 | வகையாபேதம் | வசுதைபேதம் |
| 46 | 27 | டுடும்பிருந்து | டுடம்பிருந்து |
| 47 | 4 | மாவிருந்தும் | மரவிருந்தும் |
| | 28 | சுண்மயங்கி | கண்மயங்கி |
| 50 | 5 | நட்டுநடு | நட்டநடு |
| 51 | 24 | துசேணபத்தேங் க்ரீஸ்யாத் | துஷேணபத்தோவ் ரீஹ்ரீஸ்யாத் |
| 58 | 16 | சீறடி | சீரடி |

உ

ஓம் தத் சத்

பரப்பிரஹ்மணே நமஃ.

# சொரூபாநுபூதிக் கொம்மி.

காப்பு—வெண்பா.

நிருபா திகசகச நிட்டையருள் வித்தாஞ்
சொரூபாநு பூதிகொம்மி சொல்வன்—கருப்பாயா
தொன்றாய்ப் பலவா யுயிர்க்குயிராய்ச் சொல்லகன்று
நின்றான்ற னெஞ்சி னினைந்து.

இராகம், நாதநாமக்கிரியை - ஆதிதாளம்.

கொம்மியடி, கொம்மிகரங் கொட்டிவாழ்த்தீ
ரிம்மையரு ளின்புறுவீர் (கொ)

நம்மையாளு நடனகுரு
செம்மைப்பாதஞ் சிரத்திற்றாங்கி (கொ)

அருவுருவ மற்றிலகு
சொரூபத்தைத் தொழுதுகாணும் (கொ)

பொருளெவைக்கும் பொருளாநிற்கும்
பொருளதனைப் போற்றிசெய்து (கொ)

அந்தரங்க மானசுகஞ்
சிந்தையறத் தெளிந்தடைய (கொ)

சொரூபாநு பூதிசொல்லும்
பொருண்முடிவாய்ப் பொலியுந்தன்னை (கொ)

கற்றுணர்ந்தார் கமலவடி
சித்தமதில் வைத்துலகில் (கொ)

குழவிகள்சொல் குதலைமொழி
பழுதறவப் பண்புணர்ந்த (கொ)
பெற்றவர்பால் பிள்ளைநின்று
சித்திரங்க டெரிக்கும்வணம் (கொ)
10. ஒருமொழியி னுண்மைஜீவர்
விரைவிற்பெற்று விளங்குமாறு (கொ)

சத்தியமே தாந்தக்கொள்கை
பத்தியினாற் பாலனோத (கொ)
கற்றவருங் கற்றிலருஞ்
சற்றுமிதைச் சார்ந்தறியார் (கொ)
கற்றுவருங் கவிஞரென்போ
ருற்றபிழை யுணர்ந்தறியார் (கொ)
மற்றெவரோ மறைந்திலகு
குற்றங்கண்டு கூறுமவர் (கொ)
உற்றுணரி லொருவனன்றி
மற்றிதாம் வழுத்தவுண்டோ (கொ)
ஆனதினா லறிவாநின்ற
ஞானகுரு நவினமெய்ஞ்ஞானம் (கொ)
அரியவே தாகமத்தின்
பொருண்முடிவைப் புகட்டுமிந்நூல் (கொ)
அறிவுடையார்க் கன்றியுழலுங்
கருமிகட்குக் காணரிதே (கொ)
சாதனச துட்டயர்க்கிங்
காதரவா யறையுமிதை (கொ)
20. அதிகாரி யனுகினன்றே
கதிகாட்டுங் கருப்பாசய (கொ)

கருவறுத்துக் களிப்பையூட்டுஞ்
சொருபாநு பூதியென்ன (கொ)

பேரளித்துப் பேயன்புன்சொல்
தாரணியுஞ் சற்குருவின் (கொ)
சீரருளைத் தேவராதி
யாரறிவ ரதுவேயன்றி (கொ)
வேறொருவர் விள்ளப்போமோ
காரணகா ரியமற்று (கொ)

பேரொளியாய்ப் பிறங்கியெங்குஞ்
சீரருளார் செங்கோலோச்சி (கொ)
மூலாதார முதலுமாகி
மேலாதார மியாவுமற்று (கொ)
நிராதார நிலையுற்றென்றும்
பராபரப் பதியாநின்று (கொ)
தராதலந் தழைக்கவெங்கு
மொரேபொரு ளுலகுயிராய் (கொ)
சராசர சாட்சியாகி
நிராலம்ப நெறிபெற்றிலகும் (கொ)
30. சின்மயமாய்த் திக்கனைத்துந்
தன்மயமாய்த் தழைத்தபூர்த்தி (கொ)

சச்சிதா னந்தசத்யம்
அச்சுத மமல நித்யம் (கொ)
சுத்தசுயஞ் சோதியாகிப்
பத்துத்திசை பாவியென்றும் (கொ)
ஆதிமத் யாந்தரகித
நீதிபெற்று நிகழும்பூர்ணம் (கொ)
அணுக்குளணு வாகிக்காண
வணுவகண்ட வடிவமாகி (கொ)
சற்புதருந் சரோஜத்தி
லற்புதா னந்தமாகி (கொ

அட்சரமா யகண்டமோன
நிச்சயநிர்த் தொந்தமாகி (கொ)
கரணங்கள் காணரிய
திரணந்தா னாகியற்று (கொ)
துரியமுடி சூழ்ந்திலகு
மறிவரிய வசலமாகி (கொ)
குருதுரியங் குலவியோங்கும்
பொருண்முடிவாப் பொருந்தியென்றும்.
40. ஏகனேய னேகவுயிர்க
ளாகியாவு மற்றதாகி (கொ)
அட்டமூர்த்த மாகிக்காண
வொட்டுறவு மொழிந்துநாளும் (கொ)
எச்சமயத் திருந்திலதா
முச்சிதமா யுணர்வரிய (கொ)
அகளங்க மாகுமையன்
சகளவுரு தாங்கிவந்து (கொ)
மானைக்காட்டி மானைக்கவருங்
கோலமதாக் கோலங்கொண்டு (கொ)
சித்திபுரத் தத்தனாகி
முத்திதரு முதல்வனாகி (கொ)
ஞானசித்தி நகரிலக
மோனகுரு முனிவனாகி (கொ)
பரமபத பரவெளியி
லருண்மணி யாதனத்தில் (கொ)
குருப்பிரபு கொலுவமர்ந்து
யருட்சோதி யண்ணலென்று (கொ)
எங்கும்புக ழிலகுராம
லிங்கனாகி நீடுலகில். (கொ)

50. நன்றறிந்தார் நயந்துபோற்று
மென்றெனவே யிருள்கடிந்த (கொ)
இராமலிங்க யிரவிதன்னி
லேமஜோதி யென்னத்தோன்றி (கொ)
சிந்தையறத தேடியாள
வந்தகுரு வடிவனாகி (கொ)
சுவகீயா னந்தந்தோன்றப்
பவமகற்றிப் பரமானந்த (கொ)
திருநடனத் தியாகனாகிப்
பெருங்கருணைப் பெம்மானாகி (கொ)
போதாந்தப் பொருளாகின்று
நாதாநத நண்ணியென்று (கொ)
நிர்வசன நெறியைப்பெற்றுச்
சர்வலோகந் தாங்குகின்ற (கொ)
சற்குருவின் சரண்மகிமை
நிர்க்குணநிலைபெற்றோங்கும் (கொ)
இரண்யமய மென்னவோங்கிச்
சரணங்க டானாய்மின்னுஞ் (கொ)
சதகோடி சந்த்ராதித்தர்க்
கதிகரிக்கு மையன்பாதம் (கொ)

60. சரணரேணு தன்னிலய
னரிஹரர்க ளவதரித்து (கொ)
பஞ்சக்ருத்யம் பரிந்துசெய்வர்
பஞ்சகர்த்தர் பண்புவாய்ந்து (கொ)
ஆதேய ராகிவந்த
போதாகிற் போவரொழிந்து (கொ)
என்றனந்த வெழின்மறைக
ணின்றுபுகழ் நிமலபாதம் (கொ)

கருணையங் கடற்றிரண்டு
பெருகியெங்கும் பிறங்குபாதம் (கொ)
விந்துநாத கலைக்குமேலாஞ்
சுந்தரசிற் சோதிபாதம் (கொ)
உன்மனியா யுள்ளிலகுந்
தன்மயமாய்த் தழைத்தபாதம் (கொ)
மனோன்மணி மகிமைபெற்றுக்
கனாகனமாங் கனகபாதம் (கொ)
தகராகாசத் தனிநடன
நிராதார நிபுணபாதம் (கொ)
சிதாகாசச் சிற்சபையிற்
சதாநடனஞ் சாற்றும்பாதம் (கொ)
70. கட்டசுகங் காணாதோட்டி
நிட்டைதந்து நீங்காப்பாதம் (கொ)
அட்டசித்தி யசலபாக்யம்
இட்டமுட னீயும்பாதம் (கொ)
அற்புதா னந்தமீந்து
பொற்பிரபை பொலியும்பாதம் (கொ)
சென்னிமிசை சேர்த்தபாதம்
முன்னைவினை யொழித்தபாதம் (கொ)
தன்னைத்தந் தாண்டபாதம்
என்னையெனக் கீந்தபாதம் (கொ)
சுகராதி தோத்திரிக்குஞ்
சகலேசன் சரணமது (கொ)
சனகனாதித் தவத்தோருளங்
கனகமயக் கதிர்கொள்பாதம் (கொ)
நாரதாதி நல்லடியர்
தேறித்தொழுந் திவ்யபாதம் (கொ)

மார்க்கண்டர் மனமுருகக்
காக்கவந்த கருணைபாதம் (கொ)
ஏமனுயி ரெளிதிற்போக்கும்
காமதகனக் கடவுள்பாதம். (கொ)
80. மலையெடுத்த வல்லரக்கன்
தலைநசுங்கத் தாக்கும்பாதம் (கொ)

கல்லாயிரு கண்ணிற்காண
நல்லபெண்ணாய் நல்கும்பாதம் (கொ)
ஆனைதுய ரகற்றியெங்கு
மோனசுக முதவும்பாதம் (கொ)
துருபதன்சேய்த் துரோபதைக்குப்
பெருகுசேலை பிறங்கடிகள் (கொ)
தூணிற்றோன்றித் தொண்டனுக்கு
மாணவர மளித்தவடி (கொ)
கல்லாலின் கண்ணிருந்து
சொல்லாமற் சொன்னபாதம் (கொ)
சிவஞான போதநல்கிப்
பவந்துடைத்த பரமவடி (கொ)
காரணகா ரியமற்றுப்
பூரணமாப் பொருந்துமடி (கொ)
அந்தங்க ளாறுமறச்
சிந்தைமுடி செறியுமடி (கொ)
அகமுகத்தோ ரகமலரச்
சுகமயமாச் சொலிக்குமடி. (கொ)
90. பகிர்முகத்தோர் பார்க்கரிதா
யகிலாண்ட மாளுமடி (கொ)

எச்சமயத் திருந்திலதா
யுச்சிதமா யோங்குமடி (கொ)

அச்சமற்றோ ரகத்திலென்று
நிச்சலமாய் நிலைத்தவடி (கொ)
எம்மதத்தோ ரேத்திநாளுஞ்
சம்மதத்தாற் றனித்தவடி (கொ)
சம்மதமாய்ச் சார்ந்தவர்க்கே
இம்மைமுத்தி யீந்தவடி (கொ)
மூவர்முதற் றேவர்காணாச்
சேவைதந்து திகழுமடி (கொ)

அந்தரங்க மானசேவை
தந்தெனுளந் தழைத்தபாதம் (கொ)
என்னைத்தானா யீந்தபாதம்
மின்னொளியாய் விளங்கும்பாதம் (கொ)
தானேதானாய்த் தனித்தெழுந்து
வானமுதம் வழங்கும்பாதம் (கொ)
பிரஞ்ஞானம் பிரமமென்று
விஞ்ஞானம் விளைத்தபாதம். (கொ)
100. அகம்பிர மாஸ்மியென்ற
சுகரசத்தைச் சொரிந்தபாதம் (கொ)

அயமாத்மப் பிரமமென
வியந்தளித்த விமலபாதம்
தத்வமசி வாக்கியத்தால்
நித்யத்வ நிகழ்த்தும்பாதம் (கொ)
பஞ்சகோசப் பகுப்பைநீக்கித்
துஞ்சாச்சுகஞ் சொரிந்தபாதம் (கொ)
பிறந்திறவாப் பெற்றிதந்து
விரைந்தெனுள் விளங்கும்பாதம் (கொ)
அறிவிலறி வாகியொரு
குறியின்றிக் குலவுபாதம் (கொ)

நினைவிற்கு ணினைவாநின்று
தனையேதான் றந்தபாதம் (கொ)
பிரிவறியாப் பெருமையாகித்
தரையிலெனைத் தாங்கும்பாதம் (கொ)
அங்கிங்கெ ஞமலோங்கி
யெங்குந்தா ணிலகும்பாதம் (கொ)
அடியரிட ரகற்றியாளப்
படியிலடி பதித்தபாதம். (கொ)
110. அடிமைகொள வன்பாது
முடியிடமா யுகந்தபாதம் (கொ)
சன்மார்க்கஞ் சரியவோங்கு
சின்மாத்ர தேவன்பாதம் (கொ)
கன்மங்கள் கழன்றபோதே
நின்மலமா நிலைத்தபாதம் (கொ)
நிர்க்குண நிறைவாயோங்கிச்
சற்குணரைச் சார்ந்தபாதம் (கொ)
நிருவிகற்ப நிலைதந்தாளு
மருவுருவி லையன்பாதம் (கொ)
ஒப்பற்றிங் கொளிர்தாட்சேவைக்
கெப்போதென் றெண்ணவேண்டாம் (கொ)
செப்பரிய திருத்தாள்காண
விப்போதே யிசைந்தகாலம் (கொ)
இக்கால மிசைந்ததென
முக்காலு மொழியலாகும் (கொ)
செத்துதிக்குஞ் செயல்களற்று
முத்தியுற மொழிவதானேன் (கொ)
குருவினடி கொண்டவன்பர்
கிருநிலத்து மெள்ளளுண்டோ (கொ)

120. குறைவென்றுங் கூறலுண்டோ
அருட்குருதா ளடைந்தவர்க்கு (கொ)
அருட்குருவி னடிமலர்கள்
பெறுமவர்க்குப் பிறவியுண்டோ (கொ)
கவ்வுமலங் கழன்றறியார்
பவ்வநீக்கிப் பரமமாக்கார் (கொ)
வாருங்க ளாரியன்றாள்
சேருங்கள் தெளிதேனுண்டு (கொ)
உன்னதமா ருயிருற்றோங்கச்
சொன்னேன்சுய சொரூபமுற்று (கொ)
தனக்குநிகர் தானாவாழ்வீர்
மனக்கிலேச மற்றுநாளும் (கொ)
அன்னைபோன் றிங் கமுதளித்து
மன்னுமடி மறந்தடிமை (கொ)
மடமையினால் வளர்ந்ததுன்பம்
படியளக்க முடியாதையா (கொ)
மூவாசை முதலைபற்றப்
பாவாகிப் பதைத்துநாளும் (கொ)
இருட்டறையி லிருந்துதேடுங்
குருட்டொளியன் கொள்கைபோன்று (கொ)
130. சாதிமதச் சமயமெனும்
பேதங்கொண்டு பேயனாகி (கொ)
சமயாசார ஜலதிவிழுந்
தெமைமறந்தே யிலவங்காத்த (கொ)
கிள்ளையொத்துக் கிருபையற்றுத்
துள்ளுமறி சுற்றுமாறு (கொ)
மூர்த்திதல முடிவிறீர்த்தங்
காத்திருந்து கருத்தழிந்து (கொ)

வாடிமிக வருத்தமாகி
யோடியலைந் துழன்றுமனம் (கொ)
தாபத்திரயத் தணலிற்சிக்கி
யாபத்தா லலையுங்காலே (கொ)
காணச்சீவ காருண்யமும்
பேணுமீசர் பத்திபெற்று (கொ)
வழங்குபாச வைராக்யமு
நயக்கும்பிர்ம ஞானமெனும் (கொ)
தருமநான்குந் தனுவாக்கொண்டு
மருவுமணி மன்றிலாடும் (கொ)
சிவனேயருட் டேசிகனாய்ப்
பவந்துடைக்கப் பாரிற்றோன்ற (கொ)
140. வந்தகுரு வரதனடி
முந்தியென்றன் முடியிருத்தி (கொ)
எந்தமுள மிருள்கடிந்த
தந்தையின்றாட் சரணமென்று (கொ)
அட்டாங்கபஞ் சாங்கத்தோடு
ஸாஷ்டாங்க தெண்டனிட்டு (கொ)
குருவருட்கோன் முன்னேநின்று
கரமிரண்டுங் கலந்துகூப்பி (கொ)
சற்குருசர் வேசமூர்த்தி
நிர்க்குணமெய்ந் நெறிகொள்கீர்த்தி (கொ)
ஹரிஹராதி யமரர்போற்றும்
பெருமானருட் பிர்ம்மமென்னும் (கொ)
சச்சிற்சுக சாந்தமூர்த்தி
யுச்சிதமா யொளிர்சம் பூர்த்தி (கொ)
இச்சையிலா ரேத்துகின்ற
அச்சுதானந் தக்கடலே (கொ)

என்றுபல வெடுத்தியம்பி
நின்றுதுதி நிகழ்த்தும்போது (கொ)
கருணாகரக் கடவுளெந்தை
யருணசல ருரும்வள்ளல் (கொ)
150. குருவருட் கோலமுற்றுச்
சிரமசைத்துச் சிறிதுநோக்கி (கொ)

கருணைசொரி கடைவாய்திறந்து
சரணடைந்த தனயாநீயும் (கொ)
எதைக்குறித்தே யிங்குவந்தாய்
பதைப்பற்றுப் பகர்வாயென்ன (கொ)
சொல்லுமென்ற சுந்தரன்ற
னெல்லையற்ற வெழிலடியில் (கொ)
நல்லமண நளினஞ்சாத்தித்
தொல்லைபறத் தொழுதுபூசை (கொ)
ஆச்சனைக ளடைவாச்செய்து
தற்சுகத்தைத் தழுவிமண்ணில் (கொ)
நிர்க்கநமஸ் காரஞ்செய்து
காக்கவந்த கண்ணுதலே (கொ)
இப்புவித்தா யென்னவந்த
செப்பரிய செல்வமேயென் (கொ)
மெய்ப்பொருளே விண்ணமுதே
யொப்புயர்வு மொழிந்தமூர்த்தி (கொ)
நாடுவேக நடுவிற்சிக்கித்
தேடுகின்றேன் செயலையொத்து (கொ)
கானனீரை நோககியோடு
மானெனவே மதிமருண்டு (கொ)
160. ஒடியலுத் துன்னடிமை
நாடியிங்கு நயந்தடைந்த (கொ)

நாணுரோ நண்ணியிங்கு
நாநாவித நாமரூபம் (கொ)
பெற்றுப்பல பேரமய
நிற்றலெது நிகிலமதில் (கொ)
காணுகின்ற கடபடாதி
தோன்றும்வாறித் தூலமது (கொ)
வந்துபோகும் வகையெதனி
லென்றனுக்கித் தேகத்தோடு (கொ)
சித்தமற்றுச் செறிந்திலகு
முத்திபெற மொழியுமையா (கொ)
எவ்வணுவி லிவ்வுலகு
செவ்வையுறச் செறிந்தடங்கும் (கொ)
சிந்தைதோன்றிச் சிதைவதெங்கே
நொந்துசுக நுகர்வதெங்கே (கொ)
அண்டபிண்ட மடங்கவொரு
பிண்டமதாப் பிடிப்பதெங்கே (கொ)
இந்தவகை யெளிதுணர்த்தி
மைந்தன்றனை யாளுமையா (கொ)
170. அந்தரங்க மறியத்தானே
வந்தடிகள் வணங்கிநின்ற (கொ)
என்னைமுன்ன மெனக்குணர்த்திப்
பின்னையாவும் பேசுமையா (கொ)
என்றுபுகழ்ந் தேத்திநிற்கக்
குன்றுப்பொழி கொண்டல்போலும் (கொ)
இன்றுலகி லீன்றாள்போலும்
கன்றைத்தேடுங் கபிலைபோலும் (கொ)
என்னையானு மெளிதிற்காண
வுன்னதமா யுற்றுநோக்கி (கொ)

முத்துப்பல் லொளிதுலங்க
நித்தியனு நிலத்திலென்னை (கொ)
அன்னையப்ப னுயுவந்தே
யென்னையறி வென்றியம்பி (கொ)
என்னையன்றி யிலகுலக
மென்னறிவி னெழுச்சியென்றும் (கொ)
என்னறிவி லிலகுசுகந்
தன்னைச்சிவஞ் சாட்சியென்றும் (கொ)
மன்னுமெனை மறைத்ததையும்
பன்னும்பிரதி பந்தமென்றாள் (கொ)
18). மித்தையாகு மின்னொளிபோ
லொத்துநிற்கு முலகமெல்லாம் (கொ)
நின்னையன்றி நிற்குவேறாய்
மன்னும்பெரு மாயையென்றான் (கொ)
அந்தக்கூ தறியொணாதாய்
சொந்தநுவு நாவலரிதே (கொ)
சிந்தையுங்க சிந்துருகி
வெந்ததுவே வெளியாகா (கொ)
தல்லன்மிக வடைந்தவனாய்
வல்லான்றாள் வணங்கியென்றன் (கொ)
ஐயனேநீ யறைந்தபொருள்
வெய்யனேற்கு விளங்கவில்லை (கொ)
கண்ணிலொன்றைக் கண்டுமகிழும்
வண்ணமெனக்கு வழுததுமையா (கொ)
அத்தாநின்று ளன்றியுலகி
லுற்றதுணை யுண்டோவென (கொ)
என்றனுள மினிதிருக்குஞ்
சுந்தரனார் சொல்லலுற்றார் (கொ)

நன்றென்று நந்தாநீயு
மென்றுமொரு மியல்பினோங்கு (கொ)
190. மார்க்கண்ட மாமுனிபோற்
சீர்பெற்றுச் செழித்திருப்பாய் (கொ)
சுகராதித் தொன்முனிவ
ரகமகிழ்வு மாகியென்றும் (கொ)
அறிவோடறி யாமையற்ற
நெறியுற்று நீடுவாழ்க (கொ)
இரவுபக லில்லாதெங்கும்
மருவுறவே வாழ்கவென்றும் (கொ)
சத்யஞான நந்தமோன
முத்திச்சுக முற்றுவாழ்க (கொ)
என்றுபல வெடுத்தியம்பி
யின்றெனைச்சே ரியற்கைமைந்தா (கொ)
பாப்பகற்றிப் பாருநின்னைக்
கரதலத்திற் கனிபோற்காண (கொ)
காட்டுகின்றோங் கனிவாநின்று
வாட்டமற்று மகிழ்வாக்கண்டு (கொ)
சிந்தையயல் செல்லாதின்று
மைந்தனேகேள் மகிழ்வாயென்று (கொ)
அங்காசனத் தமர்த்தயானும்
பொங்கமுடன் பொலிந்திருக்க (கொ)
200. எள்ளளிலா வின்பசுகங்
கொள்ளையெனக் கொண்டுலவ (கொ)
துள்ளுமனத் துடுக்கறவே
யுள்ளுஞ்சல மிறைக்கவென்றன் (கொ)
உடல்பொரு ளாவிமூன்றுந்
தடையறவே தனதாய்ப்பெற்று (கொ)

திருவடிநற் றீட்சைசெய்து
பெருங்கருணைப் பெருக்கானோக்கி (கொ)
அஜனெழுத்தை யகற்றியென்ற
னிஜசொரூப நிலைக்கவேதான் (கொ)
அத்தமத்தக மமர்த்தியிங்குப்
புத்திராபார் பொலிவதெல்லாம் (கொ)
நீயேயாவாய் நின்னையன்றிச்
சேயேவேறோ தெளிந்துரைப்பாய் (கொ)
சையோகந் தன்னைக்காண்பா
ரையாசொல் லறிந்ததனை (கொ)
கண்டோரைக் கருத்திலுன்னிக்
கண்டவனார் காட்டுமென (கொ)
சொல்லுமென்ற சொல்லைநாடி
வல்லவாநின் மருங்கடைந்த (கொ)
210. அடியேனை யன்றியிங்குக்
குடிகொண்டார் குறிக்கவின்று (கொ)
நீர்கேட்ட நிலையதனைப்
பார்த்துணர்ந்தோன் பகரில்யானே (கொ)
என்றுரைத் திருக்கவையன்
நன்றுபிள்ளாய் நவிலுகின்ற (கொ)
உன்னையுன்று னுணர்வையாகி
லென்னகுறை யிங்குனக்கு (கொ)
தன்னைக்காணத் தலைவனாகித்
துன்னுமவனைச் சொல்லும்பிள்ளாய் (கொ)
என்றகுரு வின்சொற்கேட்டு
மன்றிலொளிர் மாமணியே (கொ)
குன்றையொத்த குருவேநின்முன்
நின்றதால நிகழ்த்தில்யானே (கொ)

தூலமன்றிச் சொல்லவேறு
ஞாலமதி னவிலவுண்டோ (கொ)
என்றுட னியம்பக்கேட்டு
புன்சிரிப்புக் கொண்டிங்கையன் (கொ)
உடலதனை யுற்றுப்பார்க்கிற்
கடபடமாக் கழன்றுபோகும் (கொ)
220. கடுஞ்சுழுத்திக் காலஞ்சீவர்
படுத்திடும் படுக்கையதில் (கொ)
விடவிடென விரைந்துவந்து
படபடெனப் பகைவர்தோன்றி (கொ)
துட்டமுள்ள சொற்புகன்று
வெட்டகிட்டும் வெறிபரையும் (கொ)
கண்டுகொளாக் கனேபரமோ
தொண்டனேநீ சொல்லக்கேளாய் (கொ)
இந்தியங்க ளதனைக்காணு
மந்தக்கரண மறியுமோதான் (கொ)
அந்தகார வவித்தைநீயோ
முந்திகண்டு மொழியுமையா (கொ)
அவத்தைமூன் றறியுமோதான்
சவத்தையொத்துத் தானிருக்கும் (கொ)
தேகத்ரயஞ் செப்பநீயோ
மோகத்தான் மொழிவாது (கொ)
கோசமைந்தாய்க் கூடிநிற்கு
மீசசீவர்க் கிருப்பிடமாம் (கொ)
கூண்டினிற் குலவும்பட்சி
கூண்டாமோ குறித்துணராய் (கொ)
230. பஞ்சகோசப் பகுப்பைநீக்க
மிஞ்சுமுன்னை மேலடையா (கொ)

எனா னுடல மென் னுஞ்சொல்லை
யுன்னில்வேறு முற்றுப்பாராய் (கொ)
தன் னுடைய சரீரமெனிற்
றன்னில் வேறுச் சரிக்குமன்றோ (கொ)
எந்தவகை யியம்பினுய்நீ
வந்தடைந்த மகனேயென்ன (கொ)
அதைக்கேட் டறையலுற்றாள்
சிதைவறறுத் தேறிமனம் (கொ)
ஆதியந்த மற்றபெருஞ்
சோதியதாச் சொலிக்குமூர்த்தி (கொ)
சொன்னமொழி யுன்னலின்றி
யுன்னுஞால மொழியக்கண்டேன் (கொ)
தேவாவித் தேகமல்லேன்
கோவேயிக் குடிலையல்லேன் (கொ)
பஞ்சகோசப் பரப்பைநீக்க
மிஞ்சியே விளங்குஞ்சூன்யம் (கொ)
சூனியந்தான் சொல்லலாமோ
யாதெனதுவோ வருளுமையா (கொ)
210. என்னைக்காணு தேங்கியுன்றன்
பொன்னடியைப் புகழ்வனென்று (கொ)

பற்பலவாப் பாடியாடிப்
பொற்பாவைப் போன்றுநிற்க (கொ)
மைந்தனேநின் மயக்கநீங்க
முந்திகதை மொழிவன்கேளாய் (கொ)
பதின்மர்கள் பரவியோடு
நதிகடந்து நவமுமெண்ணி (கொ)
தன்னைவிட்டு தசமனையு
மெண்ணியெங்கு மில்லையென்று (கொ)

ஒருவனில்லை யொழிந்தானென
எருமையுற்று வாடவொருவன் (கொ)
தசமர்சரி யுற்றிருக்க
விசனமேன் விடுவீரென (கொ)
இருக்கிலவ னேனோகாணு
னிறந்தானென் றேங்குங்காலே (கொ)
அவ்வவனை யருகிருந்தி
யின்னொருகா லெண்ணுமென (கொ)
தன்னைக்கூட்டித் தானுமெண்ண
வின்னலற் றிருந்தான்பத்தாய் (கொ)
250. தசமனையுந் தானேய்க்கண்டு
விசனமற்று விளங்குவான்போல் (கொ)
நின்னைக்கண்டு நிரந்தரமு
மன்னியெங்கு மகிழ்வாய்மைந்தா (கொ)
தன்னைக்கண்ட தசமனைப்போ
லென்னைக்காட்டு மென்றலற (கொ)
நேதிநேதி வாக்கியத்தின்
சோதனையாற் சொரூபங்காட்ட (கொ)
பூரணனும் குறியுட்கொண்டு
காரணனுங் களிவுற்றோங்கி (கொ)
ஆறுனக் கறியவிங்குத்
தோன்றுமதைச் சொல்லுமென்றார் (கொ)
நாமரூப நண்ணுமுலகு
சாமிதோன்றுஞ் சத்தியமாய் (கொ)
ஆனாலஃ தியாண்டிருந்து
காணுமென விணவச்சாமி (கொ)
என்னினைவி லிலகுலக
மென்னக்கேட் டெழிற்குரவன் (கொ)

நினைவுவேறோ நிகிலம்வேறோ
வெனக்கரிய வியம்பாய்பிள்ளாய் (கொ)
260. காணுலகு கண்முன்வேறாய்த்
தோணுமது சுவாமியென்ன (கொ)
உலகநாம முருவம்விட்டுக்
கலகநினைவு கண்டுபாராய் (கொ)
நினைவைக்காண நிகிலமில்லை
நினைவுமில்லை நிகிலம்பார்க்க (கொ)
என்றடிமை யியம்பக்கேட்டு
நன்றறிந்தாய் ஞாயகீதான் (கொ)
நாமரூப நயக்குலகை
நேமித்திங்கு நிகழ்த்திடென (கொ)
என்னினைவா லிலகுலக
மென்னநினை வேதுவும் (கொ)
எங்கிருந் திலகுமென்று
புங்கவனும் புகலக்கேட்டு (கொ)
என்னிடத்தி ருந்துமேதா
னந்நினைவு மலருமென்ன (கொ)
நினைவுவேறு நீயும்வேறோ
வெனக்கறிய வியம்பாய்பிள்ளாய் (கொ)
என்னையன்றி யில்லைநினைவு
முன்னவனே மொழிவனுண்மை (கொ)
270. என்னினைவி லிருப்பதெனச்
சொன்னதுட் சுழல்வதாலே (கொ)
வேறெனவிளங்கிமறையுங்
கூறில்யானே கொடுமைநெஞ்சு (கொ)
நின்னைப்பார் நினைவைநீக்கி
யென்னகுரு யானுங்காண (கொ)

என் றுருவ மென்னவென்பன்
தன்னைநிகர் தங்கமென்ன (கொ)
பிரகாசப்பே ருருவம்பெற்றுச்
சராசரச கங்களென்று (கொ)
ளாகயாறு மதுனுணின்றே
னேகமதா யெங்குமோங்கி (கொ)
பொங்குபரி பூரணமாய்த்
தங்கித்தானுத் தழைத்துநாளும் (கொ)
சோகமற்றேன் றெழும்பனென
மோகமற்றுய் முன்புநாமு (கொ)
மெல்லாநீயா மென்றன் மறுத்தே
யெல்லாநானென் றியம்புகின்றாய் (கொ)
திரிபறவே தெளியவெனக்
குருதியுட னுணர்த்துமென (கொ)
280. நண்ணுமஞ்ஞா னத்திரிபாற்
சொன்னேனது சுத்தமன்று (கொ)
கன்னல்போன்ற கருணைவாக்கா
லென்னைமறைத் திருந்ததான (கொ)
பஞ்சகோசப் பரப்பைநீக்கி
வஞ்சமின்றி வாழுமென்னை (கொ)
காட்டிறாய் காணுங்கண்ணில்
வாட்டமற வாழ்வன்கண்டு (கொ)
காணுமற் கண்டகாட்சி
சேணுடர் தெரிவதுண்டோ (கொ)
கண்டவின்பங் கடலாப்பெருகி
யெண்டிசையு மெழில்பெற்றிலகும் (கொ)
மென்னையெனு ளியானுங்கண்ட
தென்னவென் றிசைப்பனின்று (கொ)

நிருவிகற்ப நிட்டையதின்
மருவியந்த மயமாயோங்கி (கொ)
மோனசுக முற்ருெளிர
ஞானசிவா நந்தகுரு (கொ)
சற்றுநேரஞ் சரியாத்தாறு
யுற்றுநோக்கி யுயர்குமார (கொ)
290. உன்னைக்கண்ட வுயர்நிலத்தி
லென்னவினேதமென்ன (கொ)

அதைக்கேட் டடிபணிந்து
சிதைவற்றுத் திகழுகின்ற (கொ)
அருட்கோல மாகியென்றன்
மருட்கடிந்த மாதவனே (கொ)
செத்துதிக்கா திருக்குஞ்செல்வ
முத்திதரு முழுமுதலே (கொ)
அகிலாண்ட மனைத்துமோங்குஞ்
சகதீசா சர்வவியாபி (கொ)
மூர்த்திகளான் முயன்றறியாக்
கீர்த்திபெற்ற கேடிலானே (கொ)
தீனதயா பரமூர்த்தி
ஞானஸ்வ ரூபகீர்த்தி (கொ)
மாயாமய மாயாரூபா
மாயாரகித வாத்மரூபா (கொ)
ஏமஜோதி யெழிற்குருவி
னமரசா மிர்தத்தாலே (கொ)
என்னையுமென் னிதயமோங்குந்
தன்னைக்காணச் சகலமொன்றும் (கொ)
300. கண்டதொரு காட்சிசொலத்
தொண்டனுவிற் றுெடருமோதான் (கொ)

என்னைக்காண வெழுந்தவின்பந்
　　தன்னையோதத் தரமாமோதான் (கொ)
சின்மயநின் தெரிசனத்தான்
　　மன்மதனு மாண்டுபோனான் (கொ)
நாமரூப நடனமற்றுக்
　　காமதகனங் கண்ணிற்கண்டேன் (கொ)
உளவறிந்த துணர்ந்தெமனுங்
　　களைகளுடன் கலங்கிக்கெட்டான் (கொ)
காலனொடு காமன்பட்டக்
　　கோலங்கண்டு குறியற்றிலகு (கொ)

மாயைகெட்டாள் மாயமாகித்
　　தாயேநின்றன் றன்வலியால் (கொ)
தடையற்றுத் தங்குமின்ப
　　மிடையற் றியற்கைபெற்ற (கொ)
குஞ்சிரிப்பிற் குலைந்தவையா
　　பொன்சிகரம் பொலிபுரங்கள் (கொ)
புரமூன்று முக்கண்ணினா
　　லெரிந்தனயா னென்னவென்பன் (கொ)
310. முப்புரத்தோர் முடிந்தகொள்ளைச்
　　செப்பரிது சிறியனேற்கு (கொ)

பயமெல்லாம் பரந்தனவையா
　　தயாநிதிநின் றனிபருளால் (கொ)
சேதனம சேதனமா
　　யோதுமரு வுருவமியாவும் (கொ)
பஞ்சபூதப் பௌதிகமா
　　யெஞ்சனுறு மிவ்வுலகு (கொ)
நானாவித நாமரூபந்
　　தானடைந்து தரிக்காதென்றும் (கொ)

ஆதலாலாண் பெண்ணலியுள்
ஓதுபொரு ளொன்றுமலேன் (கொ)
ஒருநான்கு யோனியலேன்
மருவெழு வகையுமல்லன் (கொ)
தூலசூக்ம காரணமாஞ்
சாலங்க டாமுமல்லேன் (கொ)
பொறிபுலன்கள் பூதமலேன்
செறியந்தக் கரணமலேன் (கொ)
பிராணுதிப் பெருக்குமலேன்
கரணுதிக் கலப்புமலேன் (கொ)
320. நனவாதி யாவுமலேன்
கனசுழுத்தி கடந்துநிற்பன் (கொ)
ஒன்றுங்கால மூன்றுமல்லேன்
குன்றுத்துரிய கொடிமுடிமேல் (கொ)
நின்றதீத நெறியைப்பெற்றே
யென்றுமெங்கு மிலகுகின்றேன் (கொ)
நினைப்புடனே நிகழுலக
மனைத்துநா னுகியல்லேன் (கொ)
இங்கங்கெனு மிடங்களின்றி
யெங்குநிறைந் தில்லனுவன் (கொ)
அதுவிதுவென் றறைவதல
னெதுவுமாகி யிருந்துமிலேன் (கொ)
இல்லையுண்டென் பதுமற்றே
யெல்லையிலா தெங்குமோங்கி (கொ)
சொல்லிலாத் தோன்றலாகிக்
கொல்லனிலாக் கோட்டைகட்டி (கொ)
மல்லுமிட்ட மன்னவர்கள்
கொள்ளைகொண்டு குலவிவாழ்ந்த (கொ)

கோசமைந்துங் குலைத்த போதே
தேசலருந் திங்களாதி (கொ)
330. முச்சுடர்க்கு முச்சிதமாச்
சச்சித்சுக சாகரமாய் (கொ)
குருதுரியங் குலவிவாழும்
பெருஞ்சோதிப் பெருக்காய்நாளும் (கொ)
நித்தியநிர் மலமாகிச்
சத்தியச னாதனமாய் (கொ)
இதுவதுவென் றியம்பலற்றுப்
பொதுநடிக்கும் பூரணமாய் (கொ)
பாவமொ டபாவமில்சு
பாவம்பெற்றேன் பரவிநிற்கும் (கொ)
வித்ததனில் விளைவுமாகி
வித்ததுவும் விளைவுள்ளாகி (கொ)
ஒத்திருக்கு முண்மைபோன்று
சத்தசத்துஞ் சதசத்தாகும் (கொ)
எப்பொருளு மென்னுள்ளாகி
யப்பொருட்குள் யானுமோங்கி (கொ)
கரும்புத்தேன் கண்டுமென்னப்
பெருகுமின்பம் பேசவாமோ (கொ)
உண்ணவுண்ண வொழிதலற்றிங்
கெண்ணவொண்ணா வியற்கையாகி (கொ)
340. ஒப்புயர்வு மோதலற்றுச்
சொப்ரகாச சொருபமான (கொ)
ஐயாநினை யன்றிவேறு
பொய்யான பொருடானுண்டோ (கொ)
நீயேநான் நின்னையன்றிச்
சேயேனைச் சிறிதுங்காணேன் (கொ)

ஆனதினு லறிந்தமேலோர்
மோனமெனை மொழிவதல்லால் (கொ)
ஆனந்தா தீதனென்பர்
ஞானசிகா மணிகளுமே (கொ)
அனந்தனென்ப ரசலனென்பர்
தனையுணர்ந்த தன்னியர்கள் (கொ)
உண்டிலனு யொளிருமெனைக்
கண்டவரும் விண்டிலரே (கொ)
அண்டபிண்ட மனைத்துலகு
முண்டுமிழ்ந்து மொருவனுகி (கொ)
பார்க்கப்பார்க்கப் பார்வைக்குள்ளே
நோக்காநோக்கை நோக்கிநின்ற (கொ)
ஒன்றதுவே வுடலுயிராய்
நின்றனைத்து நீங்கிடாமல் (கொ)
350. எல்லாந்தானுய் சொல்லாப்பொருளாக்
கல்லார்க்கில்லா வுல்லாசமாய் (கொ)
நின்றென்று நிரதிசயக்
குன்றிலேறிக் கூறுகின்ற (கொ)
சிவேசர் செகங்களற்றுத்
தேவாதி தேவனென்ன (கொ)
சர்வாதிஷ் டானமோன
நிர்வசன நெறிபெற்றென்றும் (கொ)
சுசாதிசுவ கதபேத
விசாதியற்று விளங்குகின்றேன் (கொ)
விவர்த்தோபா தானமாகி
விவகரிக்கும் வேதமுலகம் (கொ)
பழுதையிற்பாம் பற்றவண
மழியுஞ்சக மனைத்துமாக (கொ)

கற்பனைகள் கழன்றதுவாய்ப்
பொற்பதுமை பொன்றுலகில் (கொ)
நினைப்புடனே மறப்புநீங்கச்
சனனமரணஞ் சரிந்தவையா (கொ)
மறைப்புநினைப் பாலேமண்ணிற்
பிறப்பிறப்பு பெருகுமையா (கொ)
360. எண்ணிறந்த வின்னல்சன்மங்
கண்ணிற்காணக் கருப்புமாச்சு (கொ)

என்றொழியா திலகும்பிறப்
பின்றழிந்தே யில்லையாச்சு (கொ)
கண்டெனையுங் கலந்துநின்றாட்
கொண்டனனேன் சுவாமியானும் (கொ)
வஞ்சமின்றி மகிழ்வனையா
வஞ்சேனெனை யடிமைகொண்ட (கொ)
தாயேநின்றன் றயவினாலே
யோயாப்பிறவி யொழிந்ததையா (கொ)
ஈனமிலா தெழுநிலமேற்
றானவனாய்த் தனித்துநின்றேன் (கொ)
என்னையன்றி யீசத்தில்லை
தன்னைநிகர் தானேசாட்சி (கொ)
மன்னுமென்னை வனைந்தபோதே
யுன்னாலுரை வுணர்வுமிலை (கொ)
நினைப்பற்று நிற்குநேர்மை
தனைப்பெற்றோர் தானேயறிவர் (கொ)
தனைப்பெறாச் சகத்தவர்கள்
மனப்பொறா மையுறுவர் (கொ)
370. சிந்தைதெளி வில்லார்க்கெலாம்
விந்தையாக விளங்குமையா (கொ)

அந்தரங்க மறிந்தவர்க்குச்
சொந்தமாகத் தோன்றுமையா (கொ)
இன்னல்சுக மீயுமவர்க
ளென்னைவிட வில்லையென்பன் (கொ)
என்றனை யென்னையன்றி
யுன்னவில்லை யொருதுரும்பும் (கொ)
இதுதுணிபென் றெடுப்பன்கையைப்
பொதுநின்ற புலவர்சாட்சி (கொ)
ஆசைபய மற்றேனினி
மோசமில்லை மொழிவதுண்மை (கொ)
என்னைக்காணு தெங்குமோடி
யின்னலாகி யேங்குகின்ற (கொ)
என்னையெளி தீந்தவுமக்
கென்னகைம்மா றியற்றலாகும் (கொ)
உடல்பொரு ளாவிமூன்றுந்
தடையறவே தந்தேன்முன்னம் (கொ)
முன்னமேநீர் முழுதுங்கொண்டீ
ரென்னதுயா னில்லைகண்டீர் (கொ)
330. என்னனு பூதியிதே
நின்னருடா ணிகழ்த்துஞ்சாட்சி (கொ)
என்றுதொழு மெளியனைப்பார்த்
தன்றநந்த வாசிகூறி (கொ)
அறிவிலறி வாயகண்ட
நெறியுற்று நிலைத்திருப்பாய் (கொ)
ஸகஜசுக சமாதிபெற்றுப்
பகலிரவும் பறக்கடித்து (கொ)
இருந்தபடி யிருப்பாய்சும்மா
நிருவிகற்ப நிட்டைபேற்றே (கொ)
சுருதிகுரு சுவாநுபூதிப்
பெருமையிதே பெற்றிருப்பாய் (கொ)

பெறமுடியாப் பெற்றியிதே
ஒருமொழியி னுண்மையிதே (கொ)
சுருதிமுடி சொல்லலிதே
கருதரிய கருத்துமிதே (கொ)
அருந்தவத்தோ ராகுமுன்னோர்
பொருந்தியநற் பொருத்தமிதே (கொ)
390. இயானடைந்த யின்பமிதே
நீயடைந்து நிலைத்திருப்பாய் (கொ)
அகண்டைக்கி யாநுபவத்தை
யிகத்தடைந்தா யெழிற்குமரா (கொ)
கிருதகிருத்தியா கீர்த்திபெற்றாய்
நிரங்குசத் திருப்திபெற்றாய் (கொ)
பாரிற்றுக்கா பாவமுற்றாய்
காரிருளைக் கடுகவென்றாய் (கொ)
பரமானந்தப் பாக்யம்பெற்றாய்
திரமாயென்றுஞ் செழித்திருப்பாய் (கொ)
குறைவற்றுக் குவலயத்தில்
நிறைவுற்ற நெறிபெற்றோங்கும் (கொ)
சீவன்முத்தர் சித்திபெற்றாய்
மேவொணாத மேன்மையுற்றாய் (கொ)
சாந்திகருணை தாந்திமுதிதை
வாய்ந்திலகு மகான்கள்போன்று (கொ)
சதோதயத் தனிமுதலாய்
விதேகமுத்தி மேவுவாய்காண் (கொ)
என்றுபல வெடுத்தியம்பி
மன்றிலொளிர் மாதவனும் (கொ)
400. அருளுருவா யமர்ந்திருப்பர்
பொருண்முடிவாய்ப் பொலிந்துநாளும் ()

குன்றிலக்காங் குருமொழியை
யென்றுமறவா ரியலடியார் (கொ)
ஆவாவற்ற வன்புட்கொண்டு
சிவானந்தத் தெளிதேனுண்டு (கொ)
குருவாணை கொண்டுவாழ்வர்
அருட்சோதி யன்பரெல்லாம் (கொ)
அவராணை யகமிருத்திற்
சிவராஜ சித்தராவர் (கொ)
சிவராஜ யோகசித்தி
தவசிரேட்டர் ஜாடைநோக்க (கொ)
தன்னைப்போல மன்னுயிரை
யுன்னுதலு முண்மையன்றோ (கொ)
சிவகா ருண்யந்தீர்ந்த
சேவையென்று செய்வர்மிக்கோர் (கொ)
ஞானிவிவ காரமண்ணிற்
கானவுப காரமன்றோ (கொ)
ஆனதினா லன்பர்களே
யானடைந்த வநுபவத்தை (கொ)
410. ஈனமற வீண்டடைந்தால்
மௌனமுற்று வாழலாகும் (கொ)
காகமுற வுடன்கலந்து
லோகமதி லுண்ணும்வாறு (கொ)
விரைந்தழைப்பன் வேகமுடன்
பரந்தமனப் பண்புளராய் (கொ)
ஆகமேதா மாகவெண்ணி
மோகத்தின் மூழ்கினோரே (கொ)
அப்பனரு ளருவிபெருகி
யிப்புவியோ டெல்லாநின்ற (கொ)

அகண்டாகார வமிர்தவெள்ள
மிகப்பரந்து வேகமாகி (கொ)
நிறைவுற்று நீங்காதாகிக்
குறைவற்று குலவுதிங்கே (கொ)
வாரீருல கீரேவேதச்
சாராமிர்த சாகரத்தில் (கொ)
விரைவில்வாரீர் வெள்ளநுண்பீர்
புரையற்ற புந்திபெற்று (கொ)
போதகரம் பொலியமொண்டு
வாதமற்ற வாயாலுண்டு (கொ)
420. பிறப்பில்லாப் பிறங்குமுத்தித்
திறம்பெற்றுச் செழித்திருப்பீர் (கொ)
எல்லோரு மின்புறலா
நில்லாவுட னீங்குமுன்னம் (கொ)
கரதலத்தின் கனியைப்போன்று
பெருகுமுத்தி பெற்றுவாழ (கொ)
நம்மவரே நம்பிற்குருவை
யிம்மையரு ளின்படைவீர் (கொ)
தம்மைக்கண்டு தனித்தாற்கன்றிப்
பெம்மானருட் பேறுமுண்டோ (கொ)
என்னவகை யின்புறுவீ
ரின்னதென வியம்பீரையா (கொ)
தன்னைக்கண்டு தரித்தவர்க்குப்
பின்னைதுயர்ப் பிறப்புமில்லை (கொ)
தன்னைக்காணார் தாரணியிற்
பின்னமாகிப் பிறந்தழிவர் (கொ)
ஆரியர்க ளறைந்தவணந்
தேரிலர்க்குச் செப்புமென (கொ)

சொன்னேன்குரு சொற்படிக்கிங்
கென்னளவி லில்லைகுற்றம் (கொ)
430. ஆதலினு லடைவிரையா
போதகுரு பொன்னடியை (கொ)
அப்பனரு ளடைவதற்கே
இப்போதே யிசைந்தகாலம் (கொ)
தருணமிது தருணமிது
குருவடையுங் குறியுமிதே (கொ)
நற்சமய நயந்தடைவீர்
சிற்பரசி தம்பரத்தே (கொ)
அற்புதமா நடனங்கொள்ளும்
பொற்பாதம் பொருந்திவாழ (கொ)
அன்புடனே யடைவீராகில்
வன்பவங்கள் மாண்டுசெதா (கொ)
துன்பமற்ற துரியசுக
வின்பமுற்றே யெழிலுறுவீர் (கொ)
அருட்கனிந்த வாரியன்றன்
றிருக்கருணை செழித்துவாழ்க (கொ)
குருசேவை விரும்பிச்செய்வர்
பெருகுநலம் பெற்றுவாழ்வார் (கொ)
குருவில்லான் குருடனென
வருமறைக ளறையுமன்றே (கொ)
440. குருவில்லோன் கொண்டஞானத்
திரமெதனிற் சேருமென்னின் (கொ)
குமரிதனைக் குமரிகூடி
யமளிசெய்த யநுபவமாம் (கொ)
குருவுள்ளோன் கொண்டஞானத்
திரமெதனிற் சேருமென்னின் (கொ)

குமரியுடன் குமரன்சேர்ந்திங்
கமளிசெய்யு மன்பதாகும் (கொ)
அஞ்ஞான மகற்றியெங்கும்
விஞ்ஞானம் விளங்கச்செய்யும் (கொ)
மெய்ஞ்ஞான மேவுமவ
ரெஞ்ஞான்று மெழிற்குருவின் (கொ)
திருப்பணிக டிறமறிந்து
மருவிநல்ல மாதவர்க்கு (கொ)
தெருண்மிகுஞ் சேவைசெய்து
பெருங்கருணைப் பெற்றுவாழ்வர் (கொ)
நடனகுரு நாதன்பாதம்
படியிற்காணப் பரமமாவர் (கொ)
சடந்துக்க மசத்துமற
மடியாமன மாண்டுவாழ்வர் (கொ)
450. தொழிலற்ற சுகாதீத
மழிவற் றமிர்தாவீர் (கொ)
செப்பரிய செல்வம்பெற்றே
யொப்பற்றிங் கொளிர்வீரையா (கொ)
அற்புதமா னந்தமுற
வுற்பவித்த வுடலமிது (கொ)
எண்ணரிய வெழிலுருவிற்
கண்ணைப்போலக் கண்டிவ்வீணை (கொ)
காலத்தைக் கழிக்கினருட்
கோலத்தைக் கொள்வதென்றே (கொ)
இந்தத்தேக மிங்கழிந்தா
லந்தரங்க மறியப்போமே (கொ)
இத்தைவிட்டெ னியற்றலாகும்
சத்தியமாச் சாற்றலாமோ (கொ)

நீர்க்குமிழி நிலையுற்றோங்கும்
பார்க்கமண்ணிற் பதனமாகும் (கொ)
நிலையற்ற நெறியைப்பெற்றுப்
குலைந்துவிடுங் கூறுமுன்னே (கொ)
பிறந்தவுடன் பிள்ளைசாகக்
காத்தேந்திக் கலங்குகின்ற (கொ)
உங்கள்கதி யுணர்ந்துகொளா
தெங்குந்தேடி யேங்கினாளும் (கொ)
குணங்கெட்டுக் கொடுமையான
பணந்தேடிப் பதனம்பண்ணி (கொ)
பூதங்கள் போலக்காத்தும்
பாதகங்கள் பலபுரிந்து (கொ)
பெண்ணாசை பிடித்துக்கொண்டு
நண்ணாரால் நடுங்கினாளும் (கொ)
வண்ணார்கள் வளர்க்குமந்தக்
கண்ணில்லாக் கரத்தைப்போன்று (கொ)
எடுக்காச்சுமை யெடுத்துவாழ்வீர்
இடுக்கங்க ளியற்றிச்சதா (கொ)
அதிதியப்பி யாகதிகள்
விதியிலுண வளிக்கறியார் (கொ)
ஏழையர்க ளின்படையக்
கூழையேனுங் கொஞ்சமீயார் (கொ)
புழுபுழுத்துப் பொங்குகின்ற
நழுவமுது நல்கறியார் (கொ)
சாததீர்த்தந் தன்னையியாக்
காதகராய்க் கருணையற்றீர் (கொ)
பணந்தானோ பதமளிக்கும்
பிணமான பின்னென்செய்வீர் (கொ)

தன்னைவிட்டுத் தனக்குவேறும்
பொன்பூவை பூமிமூன்றும் (கொ)
கண்ணியமாக் கருதிநாளும்
புண்ணிற்புழுப் போலவாழ்வீர் (கொ)
மானாபி மானத்தாலே
யேனோவீ ணிடுக்கணுற்றீர் (கொ)
ஆர்ச்சித்த வாஸ்திகளை
வார்சுகளும் வழக்கெடுத்து (கொ)
சாவிமுதற் சகலபண்டங்
கூவிக்கொள்ளைக் கொண்டுபோக (கொ)
வார்த்திகம் வந்துவாட்ட
நாற்றிசையு நயந்துபார்த்து (கொ)
கனதனங் கழிந்ததையுந்
தனயர்செய் சடங்கினையும் (கொ)
மாட்டுப்பெண்ணு மனைவிமக்கள்
கூட்டத்தார் கொடுமைகளும் (கொ)
நினைந்துநித நெடுமூச்சாகி
வனம்படிந்து வழியக்கண்கள் (கொ)
480. இனம்பிரிந்திங் கேங்குமான்போன்
மனத்திற்றடு மாற்றமுண்டாய் (கொ)
வாடிமிக வருந்தியேங்கித்
தேடுவீர் தென்றிசையை (கொ)
ஓடுவீ ராகினும்மை
நாடிநனி நம்பியுள்ள (கொ)
மாடுமக்கள் மனையோடாடுங்
கூடும்பெண்டிங் கொஞ்சுங்குழவி (கொ)
தேடிவைத்த திரவியமுங்
கூடக்கூட்டிக் கொண்டுபோகா (கொ)

திங்கவரை யெவர்கள்காக்கச்
சங்கையற்றுத் தரைக்கணவிட்டீர் (கொ)
நீண்டகால நிலைத்திருந்த
கூண்டைவிட்ட கொடுமையேனே (கொ)
காமாந்த காரத்தாலே
நாமாக நயந்திருந்த (கொ)
தேகம்விட்டுச் செலலழகோ
வேகபோக மிழந்துகாண (கொ)
கயிற்றரவுங் கட்டைககள்வன்
மயக்கிருளின் மன்னும்வணம் (கொ)
490. வானிற்காணில் வளைவைப்போலும்
கானற்சலங் கண்டாற்போலும் (கொ)
இப்பியிலி ரசிதம்போலச்
செப்பநிற்குந் தேகந்தானும் (கொ)
கனவிற்கண்ட காட்சிபோலும்
கணத்தினீங்குங் கருமதேகம் (கொ)
இருந்ததுபோ லிருந்திமைக்குள்
மறைந்திடுதல் மண்ணிற்கண்டும் (கொ)
சுத்தாவி சூழத்தீபம்
வைத்துத்தேடும் வகையாய்நீவீர் (கொ)
தேகந்தா மாச்செறிந்து
மோகத்தான் முடிவீரழியும் (கொ)
தேகந்தேகி தெளிந்திரண்டிற்
றேகியெது தெரியீரையா (கொ)
அந்நமய மாதியைந்தாய்
முன்னவரு மொழிவருடல் (கொ)
கோசமைந்தாய்க் குலவுங்கூண்டை
நேசித்துழல்வர் நிலையிற்றேகம் (கொ)

கத்திவுரை கண்டிருப்பீர்
கத்தியாமோ கௌசனையும் (கொ)
கத்தியான்மா கவசங்கோசஞ்
சத்யமாகுஞ் சார்ந்துபாரும் (கொ)
சோற்றுவிட்ட சுவருமாகிக்
காற்றெடுங்கிற் கட்டையாகும் (கொ)
மசஞ்சலஞ்சீழ் மாம்சமாதி
குலவுகின்ற கோணியாகும் (கொ)
புழுநெளிந்து பொலியுங்கேணி
கழுகலகை களிக்குந்தீனி (கொ)
உரோமங்க ளுடையபெட்டி
குரோதங்கொண்டு திரியுந்தொட்டி (கொ)
பெண்டுகள்காற் றிண்டாக்கிடக்குந்
தொண்டியொன்ப துடையபொம்மை (கொ)
தோன்மூடிச் சுழலும்பதுமை
மால்கொண்டு மடியநின்றீர் (கொ)
சத்தத்தாற் சாகும்புள்க
ளொத்தபரிச மொழியுந்தந்தி (கொ)
உருபத்தால் நோக்கில்விட்டி
லாபத்திங் கடைதல்கண்டும் (கொ)
நாவினால் நல்லமீன்கள்
ஆவியற லகிலமறியும் (கொ)
கந்தத்தால் கெட்டழியும்
மந்தமதி வண்டினங்கள் (கொ)
பஞ்சவிடயப் பாம்புகடிக்கத்
துஞ்சாரெவர் சூழுலகில் (கொ)
ஐந்துதலை யரவந்தீண்ட
நொந்தழியா யாவர்சொல்லும் (கொ)

இந்தவகை யிலகுந்தேகஞ்
சிந்தையதிற் றெளிவிலாது (கொ)
மூவாசை முதலைவாயில்
நோவாது நுழைந்தேநாளும் (கொ)
சுழற்காற்றிற் றுரும்பஞ்சாய்ப்
பழிப்புண்டு பதைத்துநாளும் (கொ)
தேவாதி தேவனென்றன்
கோவாகுங் குருவருளால் (கொ)
கொஞ்சந்தேறிக் குலகோத்திர
வஞ்சகங்கள் வரன்முறையாம் (கொ)
சாதிமதச் சமயநிசஞ்
சோதித்தோஞ் சூழ்ந்துபல (கொ)
கண்டறிந்தோங் கலைகளாய்ந்திங்
கெண்டிசைக்கு மிதமுரைப்போம் (கொ)
சன்மதங்க டழைத்ததனி
னுன்மதங்க ளுரைக்கொண்ணுதாய் (கொ)
விரிந்துபல விளங்கினுலுந்
திரமிரண்டிற் றிகழுகின்ற (கொ)
மூர்த்திதலந் தீர்த்தமகிமை
சாஸ்திரத்திற்சாற்றும்வணம் (கொ)
கிளிமொழியல் கேட்கப்புகன்று
விளைவறியா துளமருண்டு (கொ)
உளவறியா தோடியுழன்று
பொளபொளனப் பொய்புகன்று (கொ)
அகங்கரித்து மறிந்தவர்போற்
சகந்துடிக்கச் சபைகள்சேர்ந்து (கொ)
சைவவைணவச் சண்டைகளா
லுய்வதென்று முளமகன்று (கொ)

சண்டையிட்டுச் சாதிமத
    முண்டெனவே யுணர்வழிந்து (கொ)
குண்டுணியர் கூட்டங்கூடித்
    தொண்டரைப்போற் றொழுதிறைஞ்சி (கொ)
சாற்றுஞ்சதுர்த் தசவித்தை
    தூற்றுமொன்றைத் துணையாக்கொண்டு ()
சரியையாதி சௌபானங்கண்
    மருவியண்ணல் மலர்ப்பதங்கள் (கொ)
புகழையோதிப் பொலியுமந்த
    நிகமாந்தத்தின் நெறியியம்பும் (கொ)
சாஸ்திரத்தைத் தழைக்கநீட்டிச்
    சூஸ்திரத்தைச் சோர்ந்துவேறு (கொ)
வார்த்தைசொல்லி வலிமைகூறிக்
    கீர்த்திபெற்றோ மெனமகிழ்ந்து (கொ)
மூர்த்தியாதி மூன்றுந்தேடி
    நாற்றிசையும் நயந்தேயோடி (கொ)
அறம்பொரு ளின்பம்வீடுந்
    துறந்துமே துன்பமுற்று (கொ)
புருஷார்த்தப் பொருளாந்தன்னை
    மறந்தவராய் மாநிலத்தில் (கொ)
ஸ்நானசந்தி சபந்தியான
    மோனயோக முற்றுஞ்செய்து (கொ)
ஞானமற்ற நரபசுவாய்ப்
    தான்சுழன்று சடைவளர்த்து (கொ)
தண்டொடுக மண்டலங்கைக்
    கொண்டுபாதக் குறடணிந்து (கொ)
காஷாயங் கௌபீனமாம்
    வேஷங்கள் விபூதிநாமம் (கொ

ருத்திராட்சந் துளசிமணி
சுற்றுங்கலைத் தோலுடனே (கொ)
புலித்தோலும் போர்த்துக்காயக்
கிலேசத்தாற் கெடுத்துடலை (கொ)
மொட்டையடித் துடல்வளர்த்துத்
துட்டைத்தேடித் தூபம்போட்டு (கொ)
மோனமென்று மூடிவாயை
பானைகொண்ட பாலுமுண்டு (கொ)
தீனீர்கள் சிட்டாயபினி
ஊனிறைச்சி யுண்டுநிதம் (கொ)
நீநானெனும் நிட்டைபெற்று
யோனியாசை யொழியாதென்றும் (கொ)
திகம்பராத் திரிந்தலைந்து
புகழ்மலியப் பொருந்தப்பேசி (கொ)
நானுஞ்சிவ ஞானியென்று
மாநிலத்தோர் மதிக்கவேதான் (கொ)
யாகாதி கன்மமெல்லாம்
மோகத்தான் முயன்றுசதா (கொ)
நெய்யைநாளு நெருப்பிலூற்றிய
பொய்கள்மிகப் புகன்றபோதும் (கொ)
கையினெல்லிக் கனியதுபோ
லுய்யுந்தனை யுணர்ந்ததுண்டோ (கொ)
பாடுபட்டும் பலனடையாக்
கேடுற்றழக் கெதியுமுண்டோ (கொ)
வீடுமெத்தை விடுதிவிட்டுக்
காடுபுககிற் கதிதானுண்டோ (கொ)
ஓடெடுத்து முண்மைகாணு
தீடழிந்து மினியராகி (கொ)

பார்புகழும் பத்தர்காணில்
ஆர்த்தியுடன் சிவானந்த (கொ)
கீர்த்தனங்கள் பாடிமய்க்கிச்
சேர்த்தபொருள் கொள்ளைகொண்டு (கொ)
கூத்தியர்க்குக் கொடுத்துக்கூடிப்
பார்த்திருக்கப் பாருலகில் (கொ)
நாய்கண்ட நலத்தைப்பெற்றுப்
பாய்கண்டு படுக்கையாகி (கொ)
சுகமனுவுஞ் சொல்லலின்றி
யிகபரமற் றிடுக்கணுற்று (கொ)
நோய்மிகுந்து நொருங்குவீரேல்
ஆயும்வகை யறியச்சொல்வீர் (கொ)
வம்பர்செய் வழக்கம்விட்டுச்
செம்பொனடி சேர்ந்துவாழ்வீர் (கொ)
தன்னைவிட்டுத் தவமியற்றி
லென்னபல னிங்கடைவீர் (கொ)
தன்னையற்றுத் தயங்குவோர்க்கே
யின்னும்பல வியம்புகின்றேன் (கொ)
சமயவாத சண்டைவிட்டுத்
தமைக்காணத் தங்குமின்பம் (கொ)
எல்லாமா யல்லவாகும்
வல்லவன்றாள் வணங்கறியா (கொ)
சீவைணவர் சிவனடியார்
கூவுதலாற் கோதறுமோ (கொ)
திருவாசகந் திருவாய்மொழி
யொருவாசக முற்றுப்பாரீர் (கொ)
புத்தியினாற் பொருந்திப்பாரீர்
பத்திமிக்குப் பண்டிதராய் (கொ)

நீறிட்டொளிர் நெற்றியினில்
மாறிட்டழும் வல்லவர்தம் (கொ)
நாமத்தை நாடநாளும்
நேமத்தா னிலேத்தோரெல்லாம் (கொ)
துவிதமத் துவிதமற்றே
யவிநாசி யாகியென்றும் (கொ)
சொல்லலற்ற சொருபன்றனே
யல்லலற்றிங் கடைவதென்றே (கொ)
சிவனயன்மால் தேவராதி
யவனவ ளதுவென்றேறும் (கொ)
சராசரமாய்ச் சாட்சியாகி
நிராலம்ப நிலேக்கநாளும் (கொ)
எல்லேயற்ற வியல்பதாகிச்
சொல்லும்வேதஞ் சொருபமதை (கொ)
தொன்முனிவர் சொன்முடிவை
வன்மனத்தார் வணங்கிநித்தம் (கொ)
கண்ணுற்றுக் காணுர்கலேகள்
வண்ணம்பல வடிக்கும்புலவர் (கொ)
உபநிடத முற்றுநோக்கார்
தபமேனுஞ் சற்றுஞ்செய்யார் (கொ)
பசுபதிகோ பாலருக்குப்
வகையாப்பேதம் வகுப்பர்பேயர் (கொ)
ஸ்கந்தோப நிடதங்காணிற்
சந்தேகந் தகனமாகும் (கொ)
நாராய ணேபநிடதம்
பாராயணம் பண்ணிற்றேன்றும் (கொ)
சிவனேசி தரனுனன்
சிவனுனன் சிதரனும் (கொ)

சிவனிருப்பன் றிருமாலுள்ளஞ்
சிவனுள்ளந் திருமாலிருப்பன் (கொ)
சாக்கிரத்திற் சனிக்குஞ்சுழுத்தி
சாக்கிரஞ் சனிக்குமிருளில் (கொ)
பொன்னிற்பணி போலும்பணியிற்
பொன்னிருந்த பொலிவுபோலும் (கொ)
வித்தினில் விளைவுகளும்
வித்ததுவும் விளைவிற்றங்கி (கொ)
யொத்திருக்கு முளைவைப்போன்று
சத்யமா தரிப்பரொன்றாய் (கொ)
சிவனுங்கே சவனுமொன்றாங்
குவலயத்தீர் கொள்ளீருண்மை (கொ)
நாராயண நமசிவாய
ஞரேபொரு ளுணரிலான்மா (கொ)
விராட்சிவனும் விஷ்ணுபிர்மம்
பராபரனும் பார்க்கினென்றே (கொ)
தசோபநிஷத் சாற்றுகின்ற
குசோத்தியத்தைக் கொஞ்சங்காணீர் (கொ)
வேதாகமம் விள்ளுஞ்சூக்கந்
தோதாகத் தோன்றுமன்றே (கொ)
கருதரிய கடவுளுண்மை
விரியபேதம் வெகுவாக்கொண்டு (கொ)
கருத்தொத்துக் காட்சிகாணு ர்
விரித்துப்பேதம் விளம்பிநாளும் (கொ)
பெருத்தசண்டை பிலக்கப்போட்டுப்
மரித்தவர்க்காய் மனமுருகி (கொ)
அழுதுநாளும் மண்ணிலழிந்தால்
பழிப்பன்றோ பாருலகில் (கொ)

ஞானம்பெறு நாள்வரைக்கு
மீனவுட லிருக்கமாட்டா (கொ)
என்றுசில ரெண்ணியோகம்
நன்றெனவே நாடிமிக (கொ)
பித்துக்கொண்டு ப்ராணாயாம
சித்துதனிற் சிதறிமனம் (கொ)
யோகசித்தி யுற்றவர்க்கே
தேகசித்தி சிக்குமென்ற (கொ)
அடயோக மதிகமெனுங்
குடிகேடர் கொள்கைநோக்கில் (கொ)
ரேசகபூ ரகஞ்செய்யும்
மாசில்கும்பக மருவினாலும் (கொ)
வாசியோக வழியடைந்து
நாசமற்ற நலமடைய (கொ)
அறுபத்துநான் காசனத்தின்
நெறிபெற்று நிலைத்துச்சதா (கொ)
சாதிப்பார் சகசொலியும்
வாதைதரும் வஜ்ரொலியும் (கொ)
ஒட்டியாண மாதிபந்தம்
அட்டியிலா தனைத்துஞ்சொலல் (கொ)
பாடனந்தம் பட்டபோதுங்
காடாந்த காரமாகும் (கொ)
சிவயோகஞ் செய்தாலன்றிப்
பவமேங்கிப் பறக்குமோதான் (கொ)
அவிரோத மாகுங்கர்ம
மவித்தையஞ் ஞானத்திற்கு (கொ)
சேற்றினாற் சேற்றைக்கழுவும்
வார்த்தையினை வழுத்தலாமே (கொ)

கதிரைக்கண்ட காரிருள்போற்
சிதையுஞானத் தினகரனால் (கொ)
அஞ்ஞான மானகர்மம்
பஞ்சாகப் பறந்துபோகும் (கொ)
ஆலம்ப மாகுங்கர்மம்
நிராலம்ப மாகும்ஞானம் (கொ)
அஞ்ஞானத் தழிவர்ஜீவர்
விஞ்ஞானம் விமலராக்கும் (கொ)
அமலஞான மடைந்துயிர்கள்
விமலமோன வீடுறுவர் (கொ)
நாடுந்தன்னை நயந்தடையார்
தேடுவர் தேகசித்தி (கொ)
தேகசித்தி தேடுகின்ற
தேகியெவன் றெளியக்காட்டீர் (கொ)
காயசித்தி கருதலேனோ
பேயர்களே பேருலகில் (கொ)
காயசித்தி கருதுவோனை
யாய்ந்தறிவா ரவரேசித்தர் (கொ)
பதினெண்மர் பகர்ந்ததல்லால்
புதிதெழுந்த புலவர்தாமும் (கொ)
சொல்லிவைத்தார் சுளுவாக்சுற்ப
மெல்லைகண்டா ரெவரோவவர்க்கு (கொ)
முன்னவர்கள் மொழியைக்கொண்டு
துன்னுமவர் தொண்டருக்கு (கொ)
பின்னவரும் பிலக்கக்கூடி
யென்னகுறை வெங்கொளித்தார் (கொ)
அத்திரமா யுதத்தாலே
குத்தவெட்டக் குலைந்திடாது (கொ)

நெருப்பாலு நீரினாலு
மொருகாலு மொருவராலும் (கொ)
எத்தாலு மிழிவுறாத
சித்தியுறத் தின்றார்கற்பம் (கொ)
கற்பமுண்டு களித்தசித்தர்
அற்பருக்கோ யஞ்சினாளும் (கொ)
பொருப்பதனிற் புகுந்தொளிப்ப
ரற்புதஞ்சே ராகம்பெற்றும் (கொ)
மறைந்தொளித்த மகிமையாதோ
விரைந்தளிக்க வேண்டுமிங்கு (கொ)
என்னதுன்ப மென்றவர்க
ளின்னமறைந் திருக்கின்றார்கள் (கொ)
கோடிக்கொருவர் கூறவேண்டுந்
தேடிக்கண்ணிற் றெளிந்ததுண்டா (கொ)
கோடாநு கோடியென்று
பாடுஞ்சித்தர் பாடலெல்லாம் (கொ)
கண்ணிற்காணுக் கள்ளருக்கே
யெண்ணிற்சித்தி யிருந்துமென்னே (கொ)
கற்பமுண்டாங் காயசித்தி
யற்பமாமோ யறைந்திடுவீர் (கொ)
காயமுற்ற கடினசித்தி
மாயமாகி மறைவதெற்கோ (கொ)
காயசித்தி பெற்றோர்மகிமை
சேயனேற்குச் செப்பிடுவீர் (கொ)
கொடும்பிறவி கொண்டுநாறுண்
டுடும்பிருந்து மொழியுமென்பர் (கொ)
கொக்கிருக்குங் குளத்தின்மேய்ந்து
பக்குவமாய்ப் பத்துநூறு (கொ)

சட்டைநீக்கிச் சர்ப்பமெல்லா
மிட்டமா யிருந்துலாவும் (கொ)
ஆண்டாயிர மாவிருந்தும்
மாண்டதென்பர் மாநிலத்தில் (கொ)
அற்பசந்து வானவெல்லாங்
கற்பமென்ன கற்றனவோ (கொ)
என்னகற்ப மிங்குத்தின்ற
வுன்னிச்சொல்லீ ருணர்விலியீர் (கொ)
தேகந்தேகி திறமறியார்
ரோகத்தா னெருங்குறுவார் (கொ)
ஆகாய கமனமாதி
வாகாகச் செய்துமென்ன (கொ)
விண்ணுலவும் விருப்பாய்ப்புள்கள்
மண்ணினெலி மறைந்துவாழும் (கொ)
கந்தமூலங் கனியருந்தும்
மந்திபன்றி வவ்வாலொடு (கொ)
வனமூலி யருந்திமாட்டி
னினமாகி யிருந்தசித்தர் (கொ)
காயமது மாயமென்ற
நியாயமது நினைந்தறியார் (கொ)
மாயைகாட்டி மறையுந்தேக
மாயுமுண்மை மண்ணின்மண்ணாய் (கொ)
மண்ணோயாணும் பெண்ணுமாகிக்
கண்மயங்கிக் கலந்துகூடி (கொ)
எண்ணிவந்த தெல்லாஞ்செய்து
மண்ணிற்காண மறைந்துபோகும் (கொ)
பெண்ணாணும் பிறந்திறந்த
திண்ணங்கண்டா லெண்ணமுண்டோ (கொ)

காரணமாய்க் கண்டமண்ணே
காரியமாங் கடங்களாய (கொ)
காரியமாக் காணுங்கடந்
தாரணியிற் சரியுமன்றோ (கொ)
காரியமுங் கலந்தவன்றே
காரணத்திற் கலக்குமன்றோ (கொ)
காரியமுங் காரணமு
மீறிநின்ற வெளிநடுவில் (கொ)
ஆடுகின்ற வருணடனந்
தேடித்தன்னைத் தெரிந்துணர்ந்து (கொ)
பேரருளாய்ப் பிறங்கிலான்மா
தாரணியிற் சரிந்திடாது (கொ)
என்றழியா திருக்குநிலை
யன்றோசித்தி யாகுமெய்ஞ்ஞ (கொ)
ஞானகுரு நாதனரு
ளானகால மறிவீரென்றோ (கொ)
ஆகையினு லழிந்துதேகம்
போகுமுனம் பொதுவிலோடி (கொ)
கற்பனை கழன்றிலகு
மற்புதா னந்தமோன (கொ)
சற்குருவின் சரணமதில்
நிர்க்குணமெய்ந் நெறிபெற்று (கொ)
நல்லமண மலர்கள்சாத்தித்
தொல்லையறத் துதித்துப்பூசை (கொ)
செய்யுந்தனைத் தெளிந்ததுவாய்
மையம்பெற்று வாழலாகும் (கொ)
உய்யவொரு மொழியதனு
லேபமற் றகண்டமாகில் (கொ)

வையம்வானம் வணங்குதற்கிங்
கையமுண்டோ யறைந்திடுவீர் (கொ)
எல்லையற்ற வின்பவாழ்வை
யல்லலற வடைவதற்கு (கொ)
துர்க்குணத்தின் றொடக்கறுத்து
நற்குணத்தை நயந்தோராகி (கொ)
கெதியென்று கிட்டிடுவீர்
மதியற்ற மானிடரே (கொ)
குருவருளைக் கொண்டவர்தாந்
திருவருளிற் சேர்ந்துவாழ்வர் (கொ)
அவரருளை யடைந்தவரும்
பவமகன்று பரமமாவர் (கொ)
இரவுபக லின்றியெங்குந்
துரியவொளி சுடர்பெற்றோங்கும் (கொ)
அறிவரு மறிவைக்கண்டு
வறுமையற்று வாழ்ந்திருப்பர் (கொ)
பெருமைமிகும் பேரின்பத்தைக்
கருமிகளால் காணலாமோ (கொ)
நினைக்குநினை வறநின்ற
தனைக்கண்டு தழைத்தேநாளும் (கொ)
குறியற்றுக் குறைவிலாத
நெறியுற்று நிலைத்திருப்பர் (கொ)
கண்மணிகண் கலந்தவணு
முண்மைபெற்றிங் குலவலாகும் (கொ)
சிதாகாச திருநடனஞ்
சதாபெற்றுத் தரிக்கலாகும் (கொ)
மறப்புடனே நினைப்புமற்றுப்
பிறப்புடனே யிறப்புமற்று (கொ)

பற்றற்ற பரமசுகம்
பெற்றுச்சதா பிழைத்திருப்பீர் (கொ)
சுட்டற்ற சுகாதீத
நட்டுநடு நண்ணிடலாம் (கொ)
என்றழியா வின்பம்பெற்றுக்
குன்றமொத்துக் குலவிவாழ்வர் (கொ)
நல்லறிஞர் நயந்தவொன்று
மெல்லையற்ற வின்புறுவீர் (கொ)
விரித்ததனை வெகுவாச்சொல்லின்
பொருத்தமொன்றுப் பொருந்திநிற்கும் ()
சமயமிதே தன்னைக்காண
வமைத்தவுட லாகுமிது (கொ)
இந்தச்சன்ம மிங்ககன்று
லெந்தச்சன்மத் தின்புறுவீர் (கொ)
எந்தச்சன்ம மெடுத்தபோது
மிந்தச்சன்ம மெடுப்பரிதே (கொ)
அரியதினு மரியதாகுந்
தெரியுநர சன்மமன்றே (கோ)
அறியும்பொரு ளறிவதற்குக்
குறிகொளுடற் கொள்ளுமிதே (கொ)
ஆனதினு லடைவீரோடி
மோனகுரு மூர்த்திகளை (கொ)
பரிசவேதி பற்பத்தாலே
இருசகன்று சுவர்ணமான (கொ)
தாம்பிராதித் தன்மையொத்து
நாம்பிரம ஞானகுரு (கொ)
அபவாத யுக்தியாலே
உபதேச மொழுங்கதாக (கொ)

செய்தயர்வு சிதைவுற்றோட
உய்தியெனு வொருமொழியை (கொ)
தந்தாள்வர் தாயைப்போன்று
பந்தநீக்கிப் பாதுகாப்பர் (கொ)
சிதாபாசன் சிதைந்தபோதே
சதானந்த சாகரமாய் (கொ)
என்றுமொரு மியல்பதாகி
நின்றின்ப நிலைபெறுவீர் (கொ)
சீவனத்தாற் சீவனென்றுஞ்
சீவன்முத்தி சிவந்தானென்றும் (கொ)
தன்னைக்கண்ட சமயமதி
லின்னற்சீவ னில்லாஞகும் (கொ)
சித்சொரூபந் திகழுமாங்கே
மற்றிதர மறைந்துதாஞம் (கொ)
சொரூபமுத்தி சொல்லுகின்ற
வரூபமுத்தி யமருமாங்கே (கொ)
அருவுருவ மற்றபோதே
கருவகன்று களிக்கலாகும் (கொ)
சிவனன்றிச் சீவனில்லை
தவமுனிவர் சாற்றும்வேதம் (கொ)
ஜீவச்சிவச் சிவோஜீவக்
ஸஜீவக்கே வலச்சிவஃ (கொ)
துசேணபத்தேதங் கிரீஸ்யாத்
துஷாபாவே துதண்டுலம் (கொ)
ஏவம்பத்தஸ் ததாஜீவக்
கர்மநாசே ஸதாசிவஃ (கொ)
என்றுசுருதி யியம்புமதை
நின்றறியார் நிபுணரென்பர் (கொ)

தேகாலயஞ் சிவமறிவாய்
மோகமற்றோர் மொழிவதன்றித் (கொ)
திருமூல ராதிமுன்னோர்
கருவின்றிக் காட்டுகின்றார் (கொ)
கபடமறக் காண்பர்நெல்லிற்
றவிடுமியுந் தள்ளிலரிசி (கொ
தாவுநெல்லுந் தண்டுலம்போற்
சீவனுமே தெளியிற்சிவம் (கொ)
மேல்வர்ணம் வேறாம்பெற்றம்
பால்வர்ணம் பார்க்கினொன்றே (கொ)
பாலைப்போன்று பரமசிவம்
தாலமெல்லாந் தழைத்திருக்கும் (கொ)
கடங்கள்பல காட்டினாலுங்
கடவானுங் காணிலொன்றே (கொ)
கடத்தினுட் ககனம்போலச்
சடத்திலே தங்குஞ்சீவன் (கொ)
கடம்போலக் காண்பரிந்த
வுடம்பதனை யுற்றுணர்ந்தோர் (கொ)
பற்பலவாய் பகருங்கடங்
கற்பனையாங் காணமண்ணே (கொ)
யோனிநான்கா முருவமெலாந்
தானாநின்று தழைக்குஞ்சிவம் (கொ)
என்னதென யாவுந்தழுவித்
தன்னந்தனி யாய்த்தயங்கும் (கொ)
சிவனன்றிச் சிற்றணுவு
நவலவுண்டோ நொய்யதாக (கொ)
சிவனெனச் செப்பலெல்லைதைப்
பாவிக்கும் பழுதைபாம்போ (கொ)

பழுதையன்றிப் பாம்புமுண்டோ
நழுகதைக ணன்குணரில் (கொ)
ஆரோப வரவந்தீண்டி
யாரேனு மழிந்ததுண்டா (கொ)
இல்லாத சீவனுக்குச்
செல்லாது செத்துப்பிறக்க (கொ)
பிறக்காம லிறப்பதெங்ஙன்
ஒருகாலு மொவ்வுமோதான்
உதிப்பதெலா மொழியுமன்றே
யதிட்டான மழியுமோதான் (கொ)
அழிவற்ற வான்மாவிற்கிங்
கிழுக்குண்டோ வெடுத்துரைக்க (கொ)
சிவன்சுத்தச் சிவமாகு
மாவலற்றோ ரறிவருண்மை (கொ)
இத்தகைய வியற்கையின்பம்
பெற்றவர்க்கே பிறப்புமில்லை (கொ)
ஆதலினா லகண்டமோனப்
போதகுரு பொன்னடியை (கொ)
சிரத்தினிடஞ் சேர்த்தவர்தாந்
தூரிசகன்று சொருபமாவர் (கொ)
கருவழியுங் காலமிதே
பரமகுரு பதம்பணிந்து (கொ)
ஒருமொழிபெற் றொளிர்வராகில்
மறுபிறப்பு மடிவதாகும் (கொ)
இலகுமொரு வின்சொல்லன்றி
மலமகல மார்க்கமுண்டோ (கொ)
சும்மாவொளிர் சூதறிந்தா
லிம்மாநிலத் திடேமுண்டோ (கொ)

எம்மானருள் பெற்றபோதே
விம்மலற்று விளங்கலாகும் (கொ)
தொட்டுக்காட்டா வித்தையது
எட்டிக்காண வியலுமோதான் (கொ)
பித்தரையோ ரியம்புமதைச்
சித்தத்தில் வைத்தறியீர் (கொ)
உளவறிந்திங் குண்மைபெற்றார்
விளைவழிந்து விமலராவர் (கொ)
வறுத்தவிதை மண்முளையாக்
கருத்தையொத்துக் காணலாகும் (கொ)
ஐயனரு ளடைந்தார்சுகம்
வையகத்தார் வழுத்தலாமோ (கொ)
மாதவன்றாள் மருவினன்றே
போதமுடி பொருந்திநிற்பர் (கொ)
பாவலர்கள் பரவுகின்ற
ஆவலற்றோ ரடிகளுக்கு (கொ)
தேவர்முதற் றிசைமுகன்மால்
ஏவல்செய்வ ரத்திசையோர் (கொ)
அத்தனடி யார்களடி
பெற்றின்பம் பெற்றாரென்று (கொ)
வேதாகமம் விள்ளுமதைப்
போதமுறப் பொருந்தகிலீர் (கொ)
சித்தத்திற் றிகழுஞ்செல்வ
முத்தமர்க்கே புணரலாகும் (கொ)
ஆறந்த மற்றுநின்ற
பேரனந்தம் பெற்றோன்றானே (கொ)
நேரறிந்து நிலைத்தோரெலாம்
பாரறியப் பதங்கள்பாடி (கொ)

இதுசமய மின்புறவே
பொதுவைநாடிப் போற்றிரென்றும் (கொ)
சித்தமயல் சேதித்தாளுங்
சுத்தன்வருங் காலமென்று (கொ)
பத்திகொண்டு பணியுமன்பர்
சித்தமயல் சிதைவரென்றும் (கொ)
முத்திமுடி வுற்றோராகிச்
சத்தியமாய்த் தரிப்பரென்றும் (கொ)
ஏறுமலை யேறிநாங்கள்
சோராச்சுகச் சொரூபமுற்றோம் (கொ)
சோதிமலை மீதிலேறிப்
பேதமற்ற பெருமைபெற்றோம் (கொ)
துரியமுடிச் சுடருற்றோங்குங்
குறியாக்குறி கொண்டோமென்றும் (கொ)
செப்பரிய செல்வம்பெற்றே
யொப்புயர் வொழித்தோமென்றும் (கொ)
ஆசையற்ற பூசைசெய்து
பேசாவருள் பெற்றோமென்றும் (கொ)
அப்பனரு ளாட்சியாக
வெப்போது மிருக்குமென்றும் (கொ)
கற்றுணர்ந்தார் கழலிற்சிரம்
பெற்றுமகிழ் வுற்றோமென்றும் (கொ)
செத்துதிக்கா திருக்குமோன
முத்திபெற் றொளிர்வமென்றும் (கொ)
கல்லாதார் கடைவாசல்
நில்லாத நெறியைப்பெற்றோம் (கொ)
மண்ணாளு மன்னர்தமை
யெந்நாளு மிரக்கோமென்றும் (கொ)

முன்னோர்கண் மொழியுங்கிஞ்சித்
தன்னீர்க ளுணர்வோடுற்று (கொ)
வேதாந்த டிண்டிமமாவைப்
பாதாந்தம் பார்த்தறியீர் (கொ)
அறியபறை யறைவித்தார்
தெரிவறியார் தெளியத்தானே (கொ)
சிவமேருரு தேவாத்தோன்றிப்
பவந்துடைக்கப் பரிந்தருளால் (கொ)
தெரிவித்தாற் றெரிவதன்றிப்
பிறிதொன்றாற் பிராந்திபோமோ (கொ)
அவனருளி னேலயன்பர்
அவன்றானா யடைவரென்றும் (கொ)
மாணிக்க வாசகரு
மாண வுரைத்தாரன்றிச் (கொ)
மதுரகவி வத்துநிக்கி
னெனைத்தின்றெங் கிருக்குமென (கொ)
சித்தத்திற் றிகழும்வத்து
மத்தைத்தின்றங் கமருமென்ற (கொ)
சடகோபர் தயவாற்றந்த
திடஞானத் திருவாய்மொழி (கொ)
இன்னம்பல வெடுத்துமுன்னோர்
சொன்னமொழி புன்னுதார்க்கு (கொ)
பன்னுகின்ற பலமறைக
ளென்னசெய்ய வெழிலுடைய (கொ)
மோனமேடை முடிவிலேறித்
தானாகித் தனித்துநின்று (கொ)
சொல்லுகின்றோந் தோடமின்றி
யெல்லாரு மின்புறவே (கொ)

பாசமைந்தாய்ப் பகட்டுகின்ற
வாசையற்று லன்றேநீவீர் (கொ)
ஈசனரு ளின்புறுவீர்
மோசமின்றி முக்காலுமே (கொ)
வேதாந்த வேணுமுதீர்
நாதாந்தர் நயந்துகேட்க (கொ)
தெருளார்ந்த சின்னமூதீர்
மருணீங்க மண்ணுலகில் (கொ)
சோதிக்கொடி சொலிக்கவானிற்
போதசங்கம் பூரியுங்கள் (கொ)
பேதமற் றபேததண்டா
லோதும்பிர்ம முரசறைவீர் (கொ)
வாதாண்டார் மண்ணிற்றேடப்
போதாந்தம் பொலிந்துநிற்கும் (கொ)
அருட்சோதி யன்பர்வாழ்க
மருட்சார்பு மடியமண்ணில் (கொ)
பொருட்சார்பைப் பொருந்திநாளு
மிருட்சார்பற் றெவையுந்தானாய் (கொ)
தானாகித் தன்னுணின்ற
நானாகி நான்றானற்ற (கொ)
தேனாகித் தெள்ளமுத
வானாகி வளர்ந்தெதற்கும் (கொ)
கோனாகிக் குலவுகின்ற
ஆன்மாவை யறிந்தறுவாய் (கொ)
ஞானமஞ் ஞானமற்று
மோனவிஞ் ஞானமுற்று (கொ)
அறிவுக்கு ளறிவாநிற்கு
நெறிபெற்று நிலைத்திருக்கும் (கொ)

குருவருளைக் கொண்டதுவாய்
மருவிநின்ற மாதவர்க்கும் (கொ)
எத்திசையு மேத்துஞானச்
சித்திபுரத் தத்தனுக்கும் (கொ)
சொரூபாநு பூதிசொல்ல
இருணீக்கி யென்னையாண்ட (கொ)
அருணசல குருவாய்வந்தென்
கருவறுத்த கண்ணுதற்கும் (கொ)
எச்சமயத் தெவரும்வாழ்த்த
வுச்சிதப்பே ருகந்தளித்து (கொ)
நிச்சலரா மானந்தா
வச்சமற்றிங் கருளுருவாய் (கொ)
இச்சையற்றே யெங்குமாகி
யட்சரனு யமர்வாயென்ற (கொ)
தேசிகனர் சீறடிக்கும்
பாசமற்ற பரமருக்கும் (கொ)
துரியநிலை சூதகன்று
பெரியநிலை பெற்றவர்க்கும் (கொ)
சுட்டகன்ற தொன்முனிவர்
மட்டகன்ற மலரடிக்கும் (கொ)
முத்தரொடு சித்தருக்கும்
பத்திமிகும் பண்பினர்க்கும் (கொ)
அருட்சோதி யத்தருக்கும்
மருட்சாரா மன்னருக்கும் (கொ)
சித்தத்திற் சேர்ந்திலகுஞ்
சுத்தசுயஞ் சோதியர்க்கும் (கொ)
படித்தவர்க்கும் படிக்கக்கேட்டு
வடித்துமனங் கொண்டவர்க்கும் (கொ)

மங்களநல் வாழ்த்துக்கூறீர்
　　சங்கையற்றுத் தழைத்துவாழ்க (கொ)
வாழியருள் வாழிசுகம்
　　வாழிசிவம் வாழிசதா (கொ)
வாழ்கவாழ்க மாமறைகள்
　　தாழ்வகலத் தமையுணர்ந்தோர் (கொ)
என்றழியா வின்பமுற்றோர்
　　நின்றருளாய் நீடுவாழ்க (கொ)
வேதியரும் விண்ணவரும்
　　ஓதுகின்ற மறைமுடிவும் (கொ)
பிரமஞானம் பெற்றோர்செயுந்
　　தருமமியாவுந் தழைத்துவாழ்க (கொ)
புகழ்சொரூ பாநுபூதி
　　யகமகிழ வங்கைகொட்டி (கொ)
அடியுங்க ளழகார்கொம்மி
　　நொடியின்முத்தி நோக்குமுற்றும். (கொ)

சொருபாநுபூதிக் கொம்மி

முற்றிற்று.